Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 4 2025

திங்கட்கிழமை 04, ஓகஸ்ட் 2025 | ஒளி: 10 கதிர் 297 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## சோமரத்ன ராஜபக்ஷ மனைவியின் கோரிக்கையை ஏற்று,

# “அனுர தன்னை நிரூபிக்க வேண்டும்”



### சோமரத்னவுக்கு சிறைக்கு உள்ளே விசேட பாதுகாப்பு உடன் வழங்கப்பட வேண்டும் என்கிறார் மனோ கணேசன்

“கிருஷாந்தி குமாரசுவாமி மட்டும் அல்ல, இன்னமும் பல நூற்று கணக்கானோர் கொலை செய்யப்பட்டனர். இதை நான் 1998ஆம் வருடமே என் சாட்சியத்தில் சொன்னேன். இன்று ஐந்து அல்லது ஆறு மனித புதை குழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நான் சொன்னது உண்மையாகி உள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில், மொத்தமாக 250 முதல் 300 பேர் வரை சித்திரவதைக்கு உள்ளாகிக் கொன்று புதைக்கப்பட்டார்கள். இன்று தண்டனைக்கு உள்ளாகி இருக்கும் நானும், ஏனைய நால்வரும் மட்டும் இத்தனை பேரைக் கைது செய்து, சித்தராவதைச் செய்து, கொன்று, குழி வெட்டி, புதைக்க முடியுமா?”

“யாழ்ப்பாணத்துக்கு செல்லும் பிரதான, வீதியில் அமைந்துள்ள, செம்மணி காவல் சாவடியில், பகல் நேரங்களில், அடையாளம் காட்டப்படுவோர், உடன் கைது செய்யப் பட்டு. இராணுவ ட்ரக்கில், ஏற்றப்பட்டு, 7ஆம் இராணுவ படை தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, விசாரணை என்ற பெயரில், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்டு, சடலங்களாக இரவு மீண்டும் செம்மணி காவல் சாவடிக்குக் கொண்டு வரப்படுவர். மேலதிகாரிகளின் கட்டளைப்படி,

தொடர்ச்சி P2

# முன்னாள் எம்.பிக்களுக்கு அஸ்வெசும



“முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு நிச்சயம் இரத்து செய்யப்படும் என தெரிவித்த அமைச்சர் வசந்த சமரசிங்க, ஓய்வூதியத்தை இரத்து செய்த பின்னர் வாழ்வதற்கு சிரமமெனில் அஸ்வெசுமவுக்கு விண்ணப்பிக்கலாம். அதனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றும் தெரிவித்தார்.

# காட்டு யானை தாக்கியதில் சிறுமி பலி

ஹம்பாந்தோட்டை, சீனிக்கு கால பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று காட்டு யானை தாக்கியதில் எட்டு வயது சிறுமி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துளளனர்.

காட்டு யானை தாக்குதலுக்கு உள்ளான சிறுமியின் தந்தை பலத்த காயங்களுடன் ஹம்பாந்தோட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை தலைமையக பொலிஸார் கூறுகின்றனர்.

சிறுமியின் தந்தை தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அருகில் வந்த யானை அவரைத் தாக்க முயன்றுள்ளது. காட்டு யானையிடமிருந்து தப்பிக்கத் தந்தை வீட்டை நோக்கி ஓடியுள்ளார், தந்தையைப் பின்தொடர்ந்து வந்த காட்டு யானை சிறுமியைத் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்துளளனர்..



# ‘கம்பஹா தேவா’ கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தலைவர் கெஹல்பத்தர பத்மேவின் நெருங்கிய உதவியாளரான ‘கம்பஹா தேவா’, தாய்லாந்திற்குத் தப்பிச் செல்ல கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தபோது விமான நிலைய குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் ஞாயிற்றுக்கிழமை(03) காலை கைது செய்யப்பட்டார்.

39 வயதான திசாநாயக்க தேவன்மினி திசாநாயக்க, கம்பஹா பகுதியில் கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்.

‘கெஹல்பத்தர பத்மே’ டுபாயில் மறைந்திருந்து பின்னர் தாய்லாந்திற்குத் தப்பிச் சென்றார், அங்கு அவர் நாட்டின் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார், ஆனால், தப்பிச் சென்று காணாமல் போனார்.

தொடர்ச்சி P2




## கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட

# முஸ்லிம்களுக்கு நீதி கோரி பேரணி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீதி கோரி காத்தான்குடியில் கவனஈர்ப்பு பேரணி ஒன்று ஞாயிற்றுக்கிழமை(03) அன்று முன்னெடுக்கப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை இடம்பெற்று 35ஆவது வருட ஷுஹதாக்கள் தினம் ஞாயிற்றுக்கிழமை(03) அன்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், காத்தான்குடி முதலாம் குறிச்சி பிரதான வீதியில் இந்த கவன ஈர்ப்பு பேரணி நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2



# நல்லூர் கந்தனை தரிசித்தார் பிரதமர்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் சனிக்கிழமை(02) அன்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

– நிதர்ஷன் வினோத

# “இலவசக் கல்வியைப் பாதுகாத்து கல்விச் சீர்திருத்தம் செய்யவும்”



கல்வியின் மூலம் பூரணத்துவமான குடிமகன் உருவாகின்றனர். இந்த பூரணத்துவமான குடிமகனை உருவாக்க வேண்டுமென்றால், கல்வி முறை சர்வதேச தொழிலாளர் சந்தையின் கேள்வி மற்றும் தேவையுடன் நேரடி தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு துறைகள் மற்றும் தொழில்களுக்கு ஏற்ற பணியாளர்களை உருவாக்குவது சாத்தியமாக அமைந்து காணப்பட வேண்டும். மானியங்களை நம்பியிருக்காத உயர்ந்த குடிமகனை உருவாக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “முஸ்லிம் பெண் ஊழியர்களின் உரிமைகளை பாதுகாக்கவும்”

### சுகாதார அமைச்சருக்கு ரிஷாட் எம்.பி. கடிதம்



திருகோணமலை மாவட்டத்தில் பணிபுரியும் முஸ்லிம் பெண்கள் சுகாதார ஊழியர்களின் மத மற்றும் பண்பாட்டு உரிமைகளை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுகாதார அமைச்சருக்குக் அனுப்பியுள்ள அவசர கடிதத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்து பணிபுரிவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, இது மத சுதந்திரம் மற்றும் பண்பாட்டு அடையாள உரிமைக்கு எதிரானது என கண்டித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# ‘குஷ்’டன் இந்தியர்கள் இருவர் சிக்கினர்

100 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ‘குஷ்’ போதைப்பொருளை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வெளியே கொண்டு சென்றபோது, ஒரு வெளிநாட்டுப் பெண் பயணி மற்றும் ஒரு ஆண் பயணி விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இந்தியர்கள் என்பதுடன் அந்த ஆணுக்கு 37 வயது பெண்ணுக்கு 47 வயது என தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் தாய்லாந்தின் பேங்கொக்கில் இருந்து இந்த "குஷ்" போதைப்பொருளை வாங்கி,

தொடர்ச்சி P2

# ஹட்டனில் நெக்லஸை திருட முயன்ற கொழும்பு பெண் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ





ஹட்டன் நகரின் குறுக்குத் தெருவில் உள்ள ஒரு நகைக் கடையில் இருந்து ரூ.275,000 மதிப்புள்ள தங்க நெக்லஸை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படும் ஒரு பெண்ணை ஹட்டன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அந்த பெண்ணை, ஹட்டன் பதில் நீதவான் எஸ். பார்த்தீபன் முன்னிலையில் வெள்ளிக்கிழமை(01) அன்று ஆஜர்படுத்தினர். சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், குற்றம் சாட்டப்பட்ட பெண்ணை ரூ.500,000 தனிப்பட்ட பிணையில் விடுவிக்கவும், வழக்கை ஜூலை 05 அன்று மீண்டும் விசாரிக்கவும் நீ பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட பெண் கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தயாரான ரோஷனாத சில்வா (26) ஆவார்.

ஹட்டன் பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணையில், குற்றம் சாட்டப்பட்ட பெண் சிறிது காலமாக மஸ்கெலியா, சாமிமலை பகுதியில் வசித்து வருவதாகவும், தற்போது கொழும்பு பகுதியில் வசித்து வருவதாகவும், ஒரு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருவதாகவும், அவர் தனது கணவரிடமிருந்து பிரிந்து இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

சோமரத்ன ராஜபக்ஷ மனைவியின் கோரிக்கையை ஏற்று,

# "அனுர தன்னை நிரூபிக்க வேண்டும்"

நாம் அந்த சடலங்களை அங்கே புதைப்போம். தொடர்ந்து புதைத்தோம். இதுதான் நடந்தது. கொலை செய்த மேலதிகாரிகள் தப்பி விட்டனர். புதைத்த நாம் தண்டனைக்கு உள்ளாகி உள்ளோம். சில மேலதிகாரிகள் கைதாகி வழக்கு தொடரப்பட்டு, பின் அந்த வழக்கு நின்று போய் விட்டது. அதிகாரிகள் தப்பி விட்டார்கள். நாம் அகப்பட்டு உள்ளோம். இது அநீதி. சர்வதேச விசாரணை நடக்கும் பட்சத்தில் நான் சாட்சியம் அளித்து குற்றம் இழைத்த அதிகாரிகளின் பெயர்களை வெளி படுத்த தயாராக உள்ளேன்"

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனது மனைவி எஸ்.சி.விஜேவிக்கிரம மூலம் இவ்வாறு கூறி உள்ளதாகத் தெரிவித்த, மனோ கணேசன், இவ்விதம், வெளிக்கொணரப் பட்டுள்ள கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கின் புதிய திருப்பம் தொடர்பில் மேலும் கூறியுள்ளதாவது,

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி எஸ்.சி.விஜேவிக்கிரம, ஜனாதிபதி அனுரகுமாரவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் நகல்களைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் அனுப்பியுள்ளார். ஐநாவுக்கும் அனுப்பி உள்ளார். அக்கடிதத்தில் தனது கணவர் தன்னிடம் கூறிய மேற்கண்ட விடயங்களை, அவர் எழுதியுள்ளார். ஆகவே இன்று இந்த கடிதம், அனுரகுமார திசாநாயக்கவின் 'கோர்ட்டில்' இன்று நிற்கிறது.

சர்வதேச கண்காணிப்பு விசாரணைக்கு ஜனாதிபதி அனுர, உடன் பட வேண்டும். அதிலே லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சுதந்திரமாக சாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கு முன், இன்று சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கு, உடனடியாக அங்கே அதி உயர் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பில், அரசியல் சிவில் சமூகமாக நாம் கூட்டு மேல் நடவடிக்கைக்குத் தயார் ஆவோம். ஐ.நா. மனித உரிமை ஆணையர் வொல்கர் டர்க்கிடம் கோரிக்கை நாம் அதிகாரப்பூர்வமாகக் கோரிக்கை விடுப்போம். பிரசித்தி பெற்ற சித்திரவதை, பாலியல் வல்லுறவு, படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்ட தயார் என்கிறார். இலங்கை வரலாற்றில் இப்படி ஒரு இராணுவத்தைச் சேர்ந்த நபர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என கூறவில்லை.

ஆகவே, இதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க அனுர குமார அரசாங்கம் முன் வர வேண்டும். சர்வதேச நெருக்குதல்களை முறையாக தர ஐ.நா. மனித உரிமை ஆணையகமும் முன் வர வேண்டும். இதை செய்ய முடியா விட்டால், இது ஒரு அரசாங்கமாகவோ, அது ஒரு ஐநா சபையாகவோ இருக்க முடியாது.

இது இன்று சர்வதேச விவகாரம் ஆகி விட்டதை அனுர குமாரவும், வொல்கர் டர்க்கரும் உணர வேண்டும். அதனால்தான், அனுரவுக்கு செம்மணி விவகாரம் ஒரு அக்னி பரீட்சை என்று அன்றே சொன்னேன். இன்று மீண்டும் கூறுகிறேன் என்றார்.

## 'கம்பஹா தேவா' கைது

கம்பஹா தேவா என்ற நபர் ஞாயிற்றுக்கிழமை (03) காலை 08.10 மணிக்கு தாய்லாந்தின் பாங்காக்கிற்குச் செல்லும் இலங்கை எயார்லைன்ஸ் விமானத்தில் ஏறுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தபோது கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைக்காக அவரை பேலியகொட கொழும்பு வடக்கு குற்றப்பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## "முஸ்லிம் பெண் ஊழியர்களின் உரிமைகளை பாதுகாக்கவும்"

மேலும், இந்த அறிவுறுத்தல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பெரும் மனஅழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அவர்களின் அரசியல் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட மத நம்பிக்கையின் உரிமைக்கும், சுதந்திர உரிமைக்கும் எதிராக இருக்கிறது," எனவும் அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல ஆண்டுகளாக ஹிஜாப் அணிந்து பணிபுரிந்து வரும் முஸ்லிம் பெண்கள், தங்கள் வேலையை திறமையாகவும், பணிகளுக்கு எவ்வித பாதிப்புமின்றி ஆற்றி வந்துள்ளனர் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அதே வேளை, மேலும் ரிஷாட் பதியுதீன் தனது கடிதத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சரின் கவனத்தை நோக்கும் வகையில், முக்கிய அம்சங்கள் சிலவற்றை பதிவு செய்துள்ளார்.



1.இலங்கையின் அரசியலமைப்பின் 10 மற்றும் 14(1)(எ) அம்சங்கள் மத சுதந்திரத்தை உறுதி செய்கின்றன.

2.ஹிஜாப் அணிவது தொழில்நுட்பத்திற்கோ அல்லது சேவைக்கோ பாதிப்பில்லை.

3.பல்வேறு மதங்களை மதிப்பது, சமூக ஒற்றுமைக்காக அவசியம்.

4.இது புதிய சலுகை அல்ல, நீண்டகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை தொடர வேண்டும் என்பதே கோரிக்கையாகும்.

அத்துடன், விரைவில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், இது அரசியலமைப்பு பண்புகளை உள்ளடக்கிய, மதிப்புமிக்க சமுதாயத்தின் செய்தியையும் பறைசாற்றும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களுக்கு...

அதன் பின்னர் பிரகடனம் வெளியிடப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் காத்தான்குடி கிளை தேசிய ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்தத்தின்போது, பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீதியும் நியாயமும் வேண்டி கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் புதை குழிகள் தோண்டப்பட்டு அங்கிருந்து எடுக்கப்படும் ஜனாஸாக்களை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த பேரணியின்போது வலியுறுத்தப்பட்டது.

பேரணியின் இறுதியில் ஷுஹதாக்கள் தின பிரகடனம் ஒன்றும் வாசிக்கப்பட்டது.

இதன்போது, சிறப்புரையை சம்மேளன தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான சத்தார் நிகழ்த்தினார் பிரகடனத்தை சம்மேளன செயலாளர் மௌலவி ரமீஷ் ஜமாலி வாசித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு இந்த பிரகடனம் காத்தான்குடி பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் போது, முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டார்கள் என்பதை வலியுறுத்தியும் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தவும், முஸ்லிம்கள் இழந்த காணிகளை மீள வழங்கவும் வேண்டும் எனவும் விகிதாசாரப்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கான காணி பங்கீடு செய்யப்பட வேண்டும் எனவும் விகிதாசாரப்படி, அரசு உயர் பதவிகளில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் அமர்த்தப்பட வேண்டும் எனவும் இந்த பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பேரணியில், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் காத்தான்குடி கிளை பிரதிநிதிகள் தேசிய ஷுஹதாக்கள் நிறுவனத்தின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

இதன்போது, கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களைத் தாங்கி நின்றனர்.

## 'குஷ்'டன்' இந்தியர்கள்...

இந்தியாவின் சென்னைக்கு வந்து, அங்கிருந்து இண்டிகோ எயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தனர்.

இவர்களின் பயணப்பொதிகளில் இருந்து 08 கிலோ கிராம் 220 கிராம் 'குஷ்' போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

## "இலவசக் கல்வியைப் பாதுகாத்து கல்விச் சீர்திருத்தம் செய்யவும்"

மருத்துவம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம் போன்ற ஒரு சில துறைகளில் கற்போர் சொந்தக் காலில் நிற்கக்கூடிய குடிமக்களாக உருவாக்கப்படுகின்றனர். ஆனால் ஏனைய துறைகளை எடுத்துக் கொண்டால் அவ்வாறு இல்லை. கல்வியில் போட்டித் தன்மையை உருவாக்கும் போது, இலவசக் கல்வியும் பாதுகாக்கப்பட வேண்டும். இலவசக் கல்வியால் ஏற்படும் வேலையின்மை வரிசையையும் நாம் இல்லாதொழிக்க வேண்டும். இந்த சமூக அநீதி ஒழிக்கப்பட வேண்டுமானால் இலவசக் கல்வி மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வளங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வு நீக்கப்பட வேண்டும். அரச முதலீடு மற்றும் பிற வளங்களைக் கொண்டு இலவசக் கல்வியை வலுப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

*Citizen Voice* வேலைத்திட்டத்தின் கீழ் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து பல்வேறு தரப்பினரோடு கலந்துரையாடிய சந்தர்ப்பத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இன்று, சுமார் 40,000 வேலையற்ற பட்டதாரிகள் காணப்படுகின்றனர். இந்த எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இலவசக் கல்வியைப் பாதுகாக்கும் அதே வேளையில், மாற்றுக் கல்விக்கான வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி நடுத்தரப் பாதையையே பின்பற்றுகிறது. இலவசக் கல்வியை மேம்படுத்தி, மாணவர் தலைமுறைக்கு மாற்று வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க




வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

கொத்தலாவல போன்ற தனியார் பல்கலைக்கழகங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்போது, நமது மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். கல்வி என்பது மனித உரிமையாகும் என்பதால், இந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். நடைமுறையில், அன்றாட வாழ்க்கையில் எல்லாம் மனப்பாடமாக தற்போதைய கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுத்து வரப்படுவதால், இது மாற வேண்டும். எனவே, இந்த முறைமையை மாற்ற வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குபவர்கள் உருவாக்கப்பட வேண்டும். எல்லாமே பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டமையக் கூடாது. பரீட்சை முறையை முற்றிலுமாக நீக்காமல் கலப்பு முறையைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். அழகியல் மற்றும் கலை போன்ற விடயங்களும் அவசியமாகும். இலவசக் கல்வி குறித்த கலந்துரையாடல் அவசியமில்லை. இலவசக் கல்வி கட்டாயமாகக் காணப்பட வேண்டும். வேலையின்மையை அதிகரிக்கச் செய்யும், பழைய, காலாவதியான கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும். எனவே, நவீன வகையில் அமையும் சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில், கல்வியின் மனித வளங்களைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ஹட்டனில் நெக்லஸை திருட முயன்ற கொழும்பு பெண் கைது

தனியார் நிதி நிறுவனத்தில் அடகு வைத்த தங்க நகைகளை மீட்டெடுக்க ஹட்டன் நகரத்திற்கு, கடந்த மாதம் 1ஆம் திகதி, வந்த குற்றம் சாட்டப்பட்ட பெண், மீட்டெடுத்த தங்க நகைகளை அதிக விலைக்கு மீண்டும் அடகு வைத்து, ரூ.110,000 எடுத்துக்கொண்டு, தங்க நெக்லஸ் வாங்க சென்றுள்ளார்.

அந்தப் பெண்ணின் இடது கை அவரது கைப்பையில் சிக்கியிருப்பதைக் கண்டு சந்தேகமடைந்த நகைக் கடை உரிமையாளர், மிகுந்த கவனத்துடன் ஒரு பவுண் தங்க நெக்லஸைக் காட்டினார்.

அந்த நேரத்தில், அந்தப் பெண் கடை உரிமையாளரிடம் நகையை தன்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டார், கடை





உரிமையாளர் கோரிக்கையை நிராகரித்தபோது, அந்தப் பெண் தனது கைப்பையில் இருந்து வலி நிவாரணி திரவ டப்பாவை எடுத்து கடை உரிமையாளர் மீது விசிறியுள்ளார்.

உடனடியாக நடவடிக்கை எடுத்த கடை உரிமையாளர், அந்தப் பெண்ணை பலமுறை தாக்கியுள்ளார். பின்னர் அருகிலுள்ள கடை உரிமையாளர்களின் உதவியுடன், அந்தப் பெண்ணைப் பிடித்து ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

தனது தந்தையின் நோய்க்கு பணம் செலுத்த பணம் தேடுவதற்காக ஹட்டன் நகரத்திற்கு வந்ததாக அவர் பொலிஸாரிடம் கூறியிருந்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள தனியார் நிதி நிறுவனங்களில் தங்க நகைகளை அடகு வைத்ததற்கான பல ரசீதுகள் மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட பல நெக்லஸ்கள் அவரது கைப்பையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக ஹட்டன் தலைமையக தலைமையக பொலிஸ் அதிகாரி டபிள்யூ.ஆர்.ஏ.டி. சுகததாச தெரிவித்துள்ளார்.

## மோடி–அனுர ஒப்பந்தத்தை
# “கிழித்தெறியவும்”

**கனகராசா சரவணன்**




“இந்தியா பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி அனுர செய்த ஒப்பந்தம் எல்லாமே இலங்கையைத் தனது ஒரு பகுதியாகக் காட்டும் ஒரு ஒப்பந்தம். அவ்வாறே ஐ.எம்.எப். உடனான ஒப்பந்தம் வெளிநாட்டில் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் சந்தையாக இலங்கையை மாற்றுவதற்கு செய்யப்படும் ஒப்பந்தம் எனவே இவைகள் கிழித்தெறியப்பட வேண்டும்” என மக்கள் போராட்ட இயக்க மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் கிருபாகரன் தெரிவித்தார்.

“மக்கள் போராட்ட இயக்கம் அனுர-மோடி திருட்டு ஒப்பந்தத்தை கிழித்தெறி, ஐ.எம்.எப். மரண பொறியை எதிர்திடுவோம்” எனும் தொனிப் பொருளில் ஒரு நாள் எதிர்ப்பு சத்தியாகிரக ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சனிக்கிழமை (02) இடம்பெற்றது. இதன்போது கலந்துகொண்ட த.கிருபாகரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

“இந்தியாவுடன் ஜனாதிபதி அனுர செய்த ஒப்பந்தம் என்ன? ஏன் செய்தார்? எதற்காக செய்தார்? என இன்று வரைக்கும் பதில் இல்லை தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக கேட்டால் அப்படி ஒன்றும் தரவில்லை ஆனால் 7 ஒப்பந்தம் செய்துள்ளதாக தெரிவிக்கின்றனர் அதேவேளை இந்தியப் பத்திரிகைகளில் இலங்கையுடன் 10 ஒப்பந்தங்கள் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே, இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் இந்தியா தனக்கு சாதகமாக இலங்கையை தனது ஒரு பகுதியாகக் காட்டும் ஒரு ஒப்பந்தமே என தெரியாமல் இருக்கிறது. அதனால் தான் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக கேட்டால், சரியான பதில்கள் கிடைக்கவில்லை.

எனவே இந்த அனுர மோடிக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட திருட்டு ஒப்பந்தம் கிழித்தெறிய வேண்டும் ஐ.எம்.எப். ஊடாக எடுக்கப்படும் திட்டம் இனங்களுக்கிடையே சம உரிமை கிடைக்காது என்பதை விளங்கிக் கொண்டோம்.

ஏற்கெனவே ஐஎம்.எப்பிடம் 16 முறை கடன் வாங்கி கொண்டு சீரழிக்கப்பட்டு ஒரு யுத்த சூழ்நிலைக்குள் வைத்திருந்ததே தவிர எமது பிரச்சினையைத் தீர்க்க எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை.

தற்போதைய அரசு 10 வருடத்திற்கு முதல் தொழிலாளர் போராட்டம் அவர்களின் உரிமைகள் என சந்திக்கு சந்தி நின்று பேசியவர்கள் இன்று நாட்டுக்கு இலகுவாக பணம் கிடைத்ததும் அதற்குப் பின்னால் ஓடும் அரசாகவுள்ளது” என்றார்.

# ஆலயத்திற்கு அருகாமையில் ஆணின் சடலம் மீட்பு

**பேரின்பராஜா, சபேஷ்**



மட்டக்களப்பு கல்லடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் ஆண் ஒருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (03) காலை மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, கிரான்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை பத்மநாபன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கூலித் தொழிலாளியான குறித்த நபர் சனிக்கிழமை(02) அன்று தொழிலுக்குச் சென்று வீடு திரும்பாத நிலையில், கல்லடி புனித அந்தோணியார் ஆலயத்திற்கு அருகாமையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

மரணத்திற்கான காரணம் இதுவரை வெளிவராத நிலையில் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


# கம்பஹா மாநகர சபை
## விலைமனுக் கோரல்

கம்பஹா மகாநகர சபைக்கு சொந்தமான பின்வரும் உப அட்டவணையிலுள்ள திட்டங்களை நிறைவு செய்வதற்கு தகுதியான ஏலதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. டெண்டர் விவரங்கள்
   I. ஏல ஆவணங்களை விநியோகித்தல் - 2025.08.04 முதல் 2025.08.18 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை
   II. ஏல ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல் - 2025.08.19 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை
   III. ஏல ஆவணங்களைத் திறத்தல் - 2025.08.19 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு
2. தகுதிகள்
   I. இணைக்கப்பட்ட ஆவணத்தின்படி கட்டுமானம் மற்றும் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தில் (CIDA) குறைந்தபட்ச பதிவு செய்திருக்க வேண்டும்.
   II. குறைந்தபட்சம் 03 மாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. ஏலங்களை சமர்ப்பித்தல்
   I. ஏலம் அடங்கிய கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.
   II. அசல் மற்றும் நகல் தனித்தனி கடிதவுறைகளில் இடுப்பட்டு, பின்னர் மீண்டும் ஒரு கடிதவுறையில் இடப்பட வேண்டும்.
   III. விண்ணப்பங்களின் முழுமையான தொகுப்பை கம்பஹா மகாநகர சபையின் பொறியியல் துறையிலிருந்து டெண்டர் படிவக் கட்டணத்தைச் செலுத்தி, நிறுவனத்தின் லெட்டர்ஹெட்டில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
4. இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கி அல்லது காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட முதல் நிபந்தனையற்ற கோரிக்கையின் பேரில் 2025.09.18 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூபாவில் கம்பஹா மாநகர சபைக்கு எழுதப்பட்ட ஏலப் பத்திரம் அல்லது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கம்பஹா மாநகர சபையில் டெபாசிட் செய்து ரசீதுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
5. தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள் ஆணையாளர், மகாநகர சபை, கம்பஹா என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது கம்பஹா மகாநகர சபையின் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் வைப்புச் செய்ய வேண்டும். தாமதமான மற்றும் முழுமையற்ற ஏலங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2025.08.19 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் கம்பஹா மகாநகர சபைக் குழு மண்டபத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
6. கம்பஹா மகாநகர சபையின் கொள்வனவுக் குழுவிற்கு இந்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் அதிகாரம் உள்ளது.
7. ஏல ஆவணங்களைத் திறக்கும் போது ஏலதாரர் அல்லது ஏலதாரரால் எழுத்துப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மட்டுமே இருக்க முடியும்.

மேலும் விவரங்களுக்கு, நகராட்சிப் பொறியாளரை அலுவலக நேரத்தில் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம் - 033 4942302

| வரிசை இல | திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.) (VAT தவிர்த்து) | ஒப்பந்தக் காலம் | ஏலப் பாதுகாப்பு | | பதிவு படிவம் CIDA தரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீண்டும் வழங்கப்படும் | மீண்டும் வழங்கப்பட மாட்டாதது | |
| 01 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் கம்பஹா, ஒருதொடா வீதியில் உள்ள நடைபாதை புதுப்பித்தல். | 4237115.30 | மாதம் 02 | 84743.00 | 1000.00 | C8 |
| 02 | கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவின் யக்கல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மிரிஸ்வத்த கம்பஹா பிரதான வீதியிலிருந்து வலவ்வத்த அரசாங்க அலுவலக வளாகம் வரையிலான சாலையில் இரண்டாவது மதகு நிர்மாணம். | 2541938.67 | மாதம் 02 | 50839.00 | 1000.00 | C9 |
| 03 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவு, யக்கல மேற்கு கிராம அலுவலர் பிரிவு எண் 231 ஏ இல் உள்ள வந்தஜோதி கல்லூரியின் வயலில் இருந்து தம்புவத்த சாலைக்கு அருகில் மழைநீர் விழும் பள்ளத்தில் வலையை அமைத்து, அந்த பள்ளத்தில் இருந்து கான்கிரீட் செய்யப்பட்ட வடிகாலில் கான்கிரீட் பலகைகளை அமைத்து, திரு. ரெஜியின் வீட்டிற்கு அருகில் இருந்து வடிகாலை தயார் செய்தல். | 1683425.31 | மாதம் 02 | 33999.00 | 1000.00 | C9 |
| 04 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 231பி பாபோல்கஹதெனிய கிராம உத்தியோகத்தர் களத்தில் பாகல் கொட டேவிட் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள கால்வாய் அமைப்பை அமைத்தல். | 2917731.27 | மாதம் 02 | 59497.00 | 1000.00 | C9 |
| 05 | கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவின் 228 ஏ நித்தல பிடிகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நித்தல பிடிகொட பேஷன்வத்த சாலை பொது சாலையில் கரை கட்டும் பணி. | 4224197.52 | மாதம் 02 | 84793.00 | 1000.00 | C8 |
| 06 | கம்பஹா பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர் இலக்கம் 225 சி இண்டிகொல்லவின் களத்தில் இலவச வீதியின் ஆரம்பப் புள்ளியிலிருந்து முன்னோக்கி வடிகால் நிர்மாணித்தல். | 1694658.80 | மாதம் 02 | 33983.00 | 1000.00 | C9 |
| 07 | சியானே சாலையில் உள்ள கேபிள் தூண் அருகே சாலையின் நீர் சேகரிக்கும் பகுதியை கான்கிரீட் செய்தல். | 466472.65 | மாதம் 02 | 9330.00 | 1000.00 | C9 |
| 08 | தேவாலய சாலையின் மீதமுள்ள பகுதியை கான்கிரீட் செய்தல் | 844668.45 | மாதம் 02 | 16894.00 | 1000.00 | C9 |
| 09 | கம்பஹா மாநகர சபையின் பிரதி மேயர் அலுவலகத்தை புதுப்பித்தல். | 491387.08 | மாதம் 02 | 9828.00 | 1000.00 | C9 |
| 10 | கம்பஹா மாநகர சபைக்குச் சொந்தமான மடமாவத்தை கைப்பந்து மைதானத்தில் தற்போதுள்ள கட்டிடத்தை புதுப்பித்தல். | 847457.62 | மாதம் 02 | 16950.00 | 1000.00 | C9 |

**எரிக் எதிரிவிக்ரம**
**ஆணையாளர் – கொள்முதல் குழுவின் தலைவர்**
**கம்பஹா மாநகர சபை**
**2025.08.04**
**கம்பஹா மாநகர சபை அலுவலகம்**
**தொலைபேசி இல: – 033 – 4942302**



TSHE
TIMES SCHOOL OF HIGHER EDUCATION
Towards a Bright Future





## PATHBREAKING MUST-TSHE MBA PROGRAM INAUGURATION

The inauguration of the pioneering MBA program took place successfully at Times School of Higher Education, No. 47, WAD Ramanayake Mawatha, Colombo 2. The ceremony to mark the occasion was held on Sunday, August 3, 2025, at 10:00 AM. It was attended by faculty members, staff, and aspiring MBA students. The event was graced by Professor Dr. Premkumar Rajagopal, President of the Malaysia University of Science and Technology (MUST).

During the event, two MBA programs were officially launched:

**MBA (General)**

**MBA Specialization in Supply Chain Management**

The event concluded on a celebratory note, reaffirming the institution's commitment to academic excellence. The successful launch marked a memorable beginning for the August intake.

wijeyanewspapers A WIJEYA NEWSPAPERS LTD GROUP COMPANY

MALAYSIA UNIVERSITY of SCIENCE and TECHNOLOGY

# முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதிய நிறுத்தமும் அஸ்வெசுமவும்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியப் பிரச்சினை பல ஆண்டுகளாக அரசியல் அரங்கில் விவாதப் பொருளாக இருந்து வருகிறது. இலங்கையில் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது என்றும் அவர்கள் இலட்சக்கணக்கான ஓய்வூதியத்தைப் பெறுகிறார்கள் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியங்கள், அதே பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஓய்வூதியச் சட்டத்தின்படியும், பின்னர் அதில் செய்யப்பட்ட சில திருத்தங்களின்படியும் வழங்கப்படுகின்றன.

தங்களுடைய ஓய்வூதியத்தை நிறுத்தினால், தன்னுயிரை மாய்த்துக்கொள்வேன் என முன்னாள் எம்.பி. நந்தன குணத்திலக்க எச்சரித்துள்ளார். அத்துடன், சர்வதேச பாராளுமன்ற அமைப்பிடம் முறையிடவுள்ளதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது.

ஜனவரி 2025இல், இலங்கை பாராளுமன்றம், 328 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், 189 விதவைகள் மற்றும் சார்ந்திருப்பவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கியதாகக் கூறுகிறது.

தகவலின்படி, ஜனவரியில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான 328 பேருக்கு 23,385,520.77 ரூபாய் (இருபத்தி மூன்று மில்லியன், முந்நூற்று எண்பத்தைந்தாயிரம், ஐந்நூற்று இருபது ரூபாய் எழுபத்தேழு சதம்) மற்றும் விதவைகள் மற்றும் சார்ந்திருப்பவர்களுக்கு ரூ. 11,020,666.14 (ஒரு மில்லியன், ஒரு இலட்சத்து இருபதாயிரத்து, அறுநூற்று அறுபத்தாறு ரூபாய் பதினான்கு சதம்) வழங்கப்பட்டது. அதன்படி, 2025 ஜனவரியில் ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 34,406,186.91. (முந்நூற்று நாற்பத்து நான்கு மில்லியன் ஆறாயிரத்து நூற்று எண்பத்தாறு மற்றும் தொண்ணூற்றொன்று) ஓய்வூதியம் பெறும் பாராளுமன்ற உறுப்பினர்களில், ஐந்து முதல் 40 ஆண்டுகள் வரை நீண்ட காலமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் உள்ளனர்.

இலங்கையின் எம்.பிக்கள் உண்மையில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களா? அல்லது ஓய்வூதிய முறையில் ஏதேனும் சிக்கல்கள் உள்ளதா? நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சட்டமும் பாராளுமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சுதந்திரத்திற்குப் பிறகு உருவாக்கப்பட்ட நமது பாராளுமன்றம், பேராசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியாளர்கள், வணிகர்கள் மட்டுமல்ல, பல உயர் பதவியில் உள்ள அரசு அதிகாரிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. சிலர் பொதுச் சேவைகளிலிருந்து விலகி பாராளுமன்றத்திற்கு வந்துள்ளனர்.

இலங்கை பாராளுமன்றம் வழங்கிய தகவல்களின்படி, பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பெற உரிமை உண்டு. இந்த ஓய்வூதியம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐந்து ஓய்வூதிய அலகுகள் மூலம் வழங்கப்படுகிறது. பிரதமர்,சபாநாயகர்,அமைச்சரவை மற்றும் அமைச்சரவை அல்லாத அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்/பிரதி சபாநாயகர், துணைக் குழுத் தலைவர் மற்றும் பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஓய்வூதியத்தை இழக்கும் முன்னாள் எம்.பிக்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படுமென சொல்லப்படுகின்றது. அவர்களுக்கு முன்னதாக, அஸ்வெசும கொடுப்பனவு பெற்றுக்கொள்ளக்கூடிய பலரும் வெறும் கையுடன் அலைந்து திரிகின்றனர். அவர்களுக்கு ஏதாவது ஏற்படுகளை செய்து கொடுத்தால் சிறப்பானதாகவே இருக்கும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறந்தள்ளினால், எதிர்காலத்தில் ஏக்க நிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களைக் காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாசம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது எனத் தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எதிர்பார்க்கப்படும் அரசியல் நேர்மை

லக்ஸ்மன்

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்றதும் மேற்கொண்ட இந்தியாவுக்கான முதல் வெளிநாட்டு விஜயத்தில் ஆராயப்படாத விடயமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை, மாகாண சபைத் தேர்தல், 13ஆவது திருத்தச் சட்டம் போன்றவைகள் அன்றைய வேளையில் விமர்சிக்க பட்டிருந்தன. ஆனால், அது அலட்டிக் கொள்ளப்படவில்லை.

இதற்கு சுதந்திர இலங்கையில் எப்போதுமே ஆளும் தரப்பாக இருந்து வருகின்ற பௌத்த-சிங்கள அதிகார வர்க்கம் இலங்கை சிறுபான்மையினச் சமூகமான தமிழர்களின் உரிமை பற்றி அலட்டிக் கொள்ளாது என்பதனையே வெளிக்காட்டுகிறது.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வைத்த அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகள் கணக்கிலெடுக்கப்படாமல் இருந்தமையினால், அஹிம்சைப் போராட்டங்களைத் தொடங்கினர். அந்த வழிமுறைகளின் தோல்வி மற்றும் அதனால் உருவான விரக்தி காரணமாகவே 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டு கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதனையடுத்து ஒடுக்கு முறையிலிருந்து மீள்வதற்குத் தனிநாடு ஒன்றைத் தோற்றுவிப்பதை இலக்காகக் கொண்டு 1977இல் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஒருவகையில் பார்த்தால் தொடர்ச்சியான அடக்குமுறைகள், உரிமை மறுப்புகளின் பின்தான் தனிநாட்டுக் கோரிக்கை உருவானது. 1977வரை மிதவாதத் தமிழ் அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்த தமிழ் மக்கள் அதன் பின்னரே மனோநிலையை மாற்றிக் கொண்டனர்.

1956, 1958, 1977, 1983 என தமிழர்கள் மீது நடந்தேறிய வன்முறைகள் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெறுவதற்கு வலுப்பெறுவதற்கும் காரணமாக இருந்தாலும் 1990களுக்குப் பின்னரே தீவிரமான ஆயுத யுத்தம் வடக்குக் கிழக்கில் உருவானது. இடையில், 1983- 1990களில், இந்தியாவின் உள் வருகை, திம்பு பேச்சுவார்த்தை, இந்திய இலங்கை ஒப்பந்தம், வடக்கு கிழக்கு இணைப்பு, இந்திய இராணுவத்தின் வருகை, வட-கிழக்கு மாகாண சபை அமைவு, இந்திய இராணுவத்தின் வெளியேற்றம் போன்றவை இடைப்பட்ட காலத்தில் நடந்தேறியிருந்தன. 1990இல் கலைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண சபை 2008ஆம் ஆண்டு கிழக்குக் தனியான மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் வரையில் கூட்டப்படவில்லை.

இலங்கைக்கு 1948ல் பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்தது முதல் தமிழ் அரசியல் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளால் பலன் கிடைக்கவில்லை. அஹிம்சைப் போராட்டங்கள் பலனளிக்கவில்லை. தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கூட 1977 ல் இருந்து 1983 வரை தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்டிருந்த அரசியல் நடவடிக்கைகள் எதுவும் தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கொண்டு வரவில்லை.

ஆயுதப் போராட்டமாக மாறிய இலங்கைத் தமிழர் பிரச்சனையில் 1983இல் இந்தியாவின் நேரடித் தலையீடு 1987 ஜூலை 29இல் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவுக்கும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் வரை நீண்டிருந்தது. அதுவே ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டப் பயணத்தில் முதலும் முடிவுமான முக்கிய மைல்கல்லாகும். அதன் பின்னர் எந்தவிதமான தீர்க்கமான முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தம் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா விரும்பி மேற்கொண்டதல்ல. அதற்கு இந்திய அழுத்தத்தினாலேயே நடைபெற்றது என்றும் கருத்துக்கள் உண்டு.

இருந்தாலும், இந்த ஒப்பந்தத்தின் நன்மைகளைத் தமிழர்கள் அடைந்து கொள்ள முடியாதபடி பல்வேறு ஆயுத இயக்கங்கள் இருந்தாலும் தமிழ் மக்களுக்காகத் தாம் மாத்திரமே போராடுவதாகக் கூறிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடையாக இருந்ததென்றும் விமர்சனங்கள் இருக்கின்றன. அது ஒருவகையில், உண்மையும் கூட. ஏனெனில் முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னர் மீண்டும் இந்தியா உருவாக்கிய 13ஆவது திருத்தத்தையே தமிழர் தரப்பு கோரி நிற்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு, மாகாண சபைத் தேர்தல் சட்டமும் உருவாக்கப்பட்டது. மாகாண சபைகள் வடக்கு, கிழக்குக்கு மாத்திரமல்லாமல், முழு நாட்டிலும் 9 மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

> **இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு, மாகாண சபைத் தேர்தல் சட்டமும் உருவாக்கப்பட்டது**

வடக்கு கிழக்குக்குத் தற்காலிக இணைப்பினடிப்படையில் 1988இல் வட கிழக்கு மாகாண சபைக்கு முதலாவது தேர்தல் நடத்தப்பட்டது. 199இல் இந்தியப் படையின் வெளியேற்றத்துடன் வட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் வெளியேறினார். அப்போதைய ஜனாதிபதி பிரேமதாச வட கிழக்கு மாகாண சபையைக் கலைத்தார். பின்னர் 2006 இல் ஜே.வி.பி. உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் இணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டு தனித்தனி மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்கு முதலாவது தேர்தல் 2008இலும் இரண்டாவது தேர்தல் 2012இலும் வடக்கு மாகாண சபைக்கு 2013இலும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் இந்தியாவின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டது என்று பேரினவாதத் தரப்பினர் கூறிவந்தனர். அதே போன்று தமிழ்த் தரப்பும் அன்றைய காலத்தில் ஒப்புவித்தனர். இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தமிழ்த் தரப்பினர் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தால் உருவான மாகாண சபை முறைமையை ஏற்பதற்கும், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு செயற்பட்டுக் கொண்டே இருந்தனர்.

ஆனால், இலங்கையில் சமாதானப் பணிக்காக வந்திருந்த இந்திய இராணுவத்துடன் புலிகளின் முரண்பாடு, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அனுசரித்துச் செயற்பட்ட முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் 1989இல் கொல்லப்பட்டமை, வட கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டமை, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகமான தோழர் பத்மநாபா மற்றும் 12 உறுப்பினர்கள் 1990 ஜூன் 19ஆம் திகதி சென்னையில் வைத்துக் கொல்லப்பட்டமை, இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் பிதாமகரான முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி 21.05.1991இல் தமிழ்நாடு சிறிபெரும்புதூரில் வைத்துத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை போன்ற காரணங்கள் 13ஆவது திருத்தம் குறித்த இந்திய அக்கறை குறைக்கக் காரணமாகியது. அதே நேரத்தில் இலங்கை அரசின் 13ஐச் சிதைக்கும் விடயத்திற்கும் உந்துதலாக அமைந்தது எனலாம்.

இந்த அக்கறை குறைவும் 13ஐ சிதைப்பதற்கான உந்துதலும் இணைந்திருந்த வடக்கு கிழக்கு 2006இல் சட்ட ரீதியாக பிரிவதற்கும் காலாகின. இந்த பிரிப்பினைச் செய்து வைத்தது ஜே.வி.பியே. இந்த ஜே.வி.பியே இப்போது ஆட்சியில் இருக்கிறது. இந்த ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தலை நடத்தும் படி தமிழர்கள் விடுக்கும் கோரிக்கைகளைக் கணக்கெடுக்கும் என்று நம்புவது வீண் முயற்சியாக இருக்கலாம். அதே நேரத்தில் அரசுக்கு எண்ணம் தோன்றும் போதே நடைபெறும் என்பதுதான் யதார்த்தம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க, அனுரகுமார திசாநாயக்க என ஜனாதிபதிகள் மாறிக் கொண்டிருந்தாலும் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதில் எந்தவித கொள்கை மாற்றமும் ஏற்பட்டிராத இலங்கையில் தமிழர் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வும் எண்ணங்களில் மாற்றம் ஏற்படுவதற்கு ஏற்றதே.

2015இல் உருவான நல்லாட்சி அரசாங்க ஆட்சிக் காலத்தில் 2017ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டத்தைத் திருத்துவதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதனைத் தொடர்ந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாத நிலைமை உருவாக்கப்பட்டது. இந்தத் தேர்தலை நடத்துவதாக இருந்தால், புதிய தேர்தல் சட்டமொன்றைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் தேர்தலை நடத்துவது. அல்லது பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கான சட்ட அங்கீகாரத்தை பாராளுமன்றத்தில் ஏற்படுத்துவது.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தாலும் இந்த இரண்டிலொன்று நடைபெற்றாலே மாகாண சபைத் தேர்தல் என்பதுதான் நிச்சயம். அதற்கு இலங்கையில் ஆட்சியிலிருக்கும் ஜே.வி.பி. தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி மனது வைக்க வேண்டும் என்பதே யதார்த்தம். அதற்கு இந்திய விஜயத்தின் போது அலட்டிக் கொள்ளாமையை நாம் உதவிக்கு வைத்துக் கொள்ளலாம். இதில் அரசியல் நேர்மை இருக்க வேண்டும் என்றும் நம்புவோம்.

## கடிதங்கள்

### காவ்வாய் வீதி பிரச்சினையால் மக்கள் பாதிப்பு



ஹட்டன் - கொட்டகலை, மேஃபீல்ட் தோட்டத்திற்குச் செல்லும் வீதி, புனரமைக்கப்படாமல் கடுமையாகச் சேதமடைந்துள்ளதால் குறித்த தோட்டத்தில் வசிக்கும் சுமார் 1,500 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தோட்டத்திற்குச் செல்வதற்கான ஒரே வீதி 4.5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இப் பாதை மாத்திரம் என்பதுடன் அதில் 1 கிலோ மீட்டர் தூரம் 2015ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3.5 கிலோ மீட்டர் தூரம் சரி செய்யப்படாமல் வீதி மிகவும் மோசமாக நிலையில் குண்டும் குழியுமாக உள்ளது,

இதனால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், ஆசிரியர்கள் உட்பட பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த தோட்டத்தின் அருகில் உள்ள கால்வாய் பல ஆண்டுகளாக அகலப்படுத்தப்படாமல் இருப்பதால் மழை நாட்களில் கால்வாய் நிரம்பி வெள்ளம் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றதுடன், குறித்த கால்வாய் அகலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தோட்ட மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ரஞ்சித் ராஜபக்ஷ

# யூனியன் வங்கி வரிக்கு முந்திய இலாபமாக ரூ.834 மில்லியனை பதிவு


தில்ஷான் ரொட்ரிகோ
பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
யூனியன் வங்கி


தினேஷ் வீரக்கொடி
தவிசாளர்
யூனியன் வங்கி

2025 ஜுன் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த, நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் யூனியன் வங்கி, வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 251 மில்லியனை பதிவு செய்துள்ளதாகவும், இது 2024ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 247% அதிகரிப்பாக அமைந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது. வங்கியின் ஐந்தொகையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கம் மற்றும் மூலோபாய ரீதியான செயற்பாட்டு மேம்படுத்தல்கள் போன்றவற்றினூடாக இந்த துரித வளர்ச்சியை எய்த முடிந்திருந்தது.

வரிக்கு முந்திய இலாபம் 58% இனால் அதிகரித்து ரூ. 834 மில்லியனாக பதிவாகியிருந்தது. பிரதான வங்கிச் செயற்பாடுகள் மற்றும் துணை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட உயர்ந்த பங்களிப்புகள் போன்றவற்றை பிரதிபலிப்பதாக இது அமைந்திருந்தது.

லீசிங் மற்றும் அடகுச் சேவைகள் பிரிவுகளில் வளர்ச்சி மூலோபாயங்கள் பின்பற்றப்பட்டிருந்ததனூடாக, இக்காலப்பகுதியில் வங்கியின் தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 100 பில்லியனை விட அதிகரித்திருந்தது. இதுவரையில் 24% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. விரிவாக்கம் வருமான வளர்ச்சியினூடாக நேரடியாக ஆதரவளிக்கப்பட்டிருந்ததுடன், உயர் கடன் அளவுகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் போன்றவற்றினூடாக ஆதரவளிக்கப்பட்டிருந்தது. அதனூடாக தேறிய கட்டண மற்றும் தரகு வருமானத்தில் 25% அதிகரிப்பையும் பதிவு செய்திருந்தது.

யூனியன் வங்கி தேறிய மதிப்பிறக்க மீளத்திருப்பல் பெறுமதியாக ரூ. 23 மில்லியனை பதிவு செய்திருந்தது. மேம்படுத்தப்பட்ட கடன் தரம் மற்றும் வசூலிப்பு முயற்சிகள் இதில் பங்களிப்புச் செய்திருந்தன. வியாபார வளர்ச்சியுடன் தொழிற்பாட்டு செலவுகள் அதிகரித்திருந்ததுடன், மூலோபாய செயற்பாடுகளில் தொடர்ச்சியான முதலீடுகளினால் மொத்த தொழிற்பாட்டு வருமானம் 8% இனால் அதிகரித்திருந்தது. இதில் வட்டி-சாரா வருமானம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் ஆகியன பங்களிப்புச் செய்திருந்தன. வாடிக்கையாளர் வைப்புகள் ரூ. 108 பில்லியனை எய்தியிருந்தன. அதில் உயர் CASA விகிதமான 28.3% பங்களிப்புச் செய்திருந்தன. அதனூடாக மேம்படுத்தப்பட்ட வைப்புக் கலவை பதிவாகியிருந்தது. வங்கி உறுதியான மூலதன போதுமை மட்டங்களை பேணியிருந்ததுடன், மொத்த மூலதன போதுமை விகிதமாக (CAR) 13.65% ஐயும் Tier I CAR ஆக 12.64% ஐயும் கொண்டிருந்தது. இது ஒழுங்குபடுத்தல் வரம்புகளை விட உயர்ந்த நிலைகளில் பேணப்பட்டிருந்தன.

குழுமத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 171 பில்லியனாக உயர்வடைந்து, வங்கியின் உறுதியான நிதிசார் அடித்தளம் மற்றும் வளர்ச்சிப் பாதையை வெளிப்படுத்தியிருந்தது.

இக்காலப்பகுதியில் பிரதான செயற்பாட்டு விசேட அம்சங்களில், யூனியன் வங்கி Turbo Draft அறிமுகம் அமைந்திருந்தது. வாகன உரிமையாளர்களுக்கு துரிதமான மற்றும் சௌகரியமான தொழிற்படு மூலதன தீர்வை வழங்குவதாக இருந்ததுடன், கொஹுவல பகுதியில் புதிய லீசிங் மையமொன்றை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனூடாக, லீசிங் வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான நிதிசார் தீர்வுகளை அணுகும் வாய்ப்பு மேம்படுத்தப்பட்டிருந்தது. வங்கியினால் அதன் தலைமையகத்தில் "Trade Connect" எனும் நிலையம், வர்த்தக சேவைகளுக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைகளினூடாக, தனிநபர் மற்றும் வியாபார வாடிக்கையாளர்களுக்கான வங்கியின் பெறுமதி மேம்படுத்தப்பட்டிருந்தது.

யூனியன் வங்கியின் தவிசாளர் தினேஷ் வீரக்கொடி குறிப்பிடுகையில், அண்மைக் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாற்றியமைப்பு செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் வங்கியின் மீட்சித்தன்மை ஆகியவற்றை பிரதிபலிப்பதாக வங்கியின் நிதிப் பெறுபேறுகள் அமைந்துள்ளன. தமது வாடிக்கையாளர் இருப்பை விரிவாக்கம் செய்து நிலைபேறான வளர்ச்சியை நோக்கி பயணிப்பதற்கு வங்கி உறுதியாக கவனம் செலுத்துகிறது என்றார்.

"2025 முதல் அரையாண்டில் நாம் பதிவு செய்துள்ள நிதிப் பெறுபேறுகளினூடாக, எமது வியாபாரத்தின் நேர்த்தியான போக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவளிக்கும் வகையில் நிலைபேறான ஐந்தொகை வளர்ச்சி மற்றும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவத்தில் காண்பித்திருந்த ஒழுக்கமான வழிமுறைகள் அமைந்திருந்தன. டிஜிட்டல் வங்கியியலினூடாக பெறுமதியை ஏற்படுத்துவதிலும், வாடிக்கையாளர்களை மையப்படுத்திய தீர்வுகளில் எமது நோக்கிற்கு ஆதரவளிப்பதற்கான வியாபார செயன்முறை மீள-பொறியமைப்பு போன்றவற்றில் மூலதன செம்மையாக்கம் பிரதான பங்களிப்பை வழங்கியிருந்தது." என யூனியன் வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தில்ஷான் ரொட்ரிகோ தெரிவித்தார்.

# 'Roopa Hala' உடன் SLT-MOBITEL கைகோர்ப்பு




இலங்கையர்களுக்கு களிப்பூட்டும் அம்சங்களின் புதிய யுகத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், திரைப் படைப்புகளை வழங்கும் கட்டணம் செலுத்தும் OTT கட்டமைப்பான 'Roopa Hala' உடன் SLT-MOBITEL கைகோர்த்துள்ளது. இந்த கட்டமைப்பின் உரிமையாளராக Evoke Digital Group அவுஸ்திரேலியா திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு களிப்பூட்டும் அம்சங்களை எவ்வாறு பார்வையாளர்கள் கண்டு களிக்கின்றனர் என்பதை மாற்றியமைக்கும் வகையில் இந்த கைகோர்ப்பு அமைந்திருக்கும். அத்துடன், பரந்தளவு திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகத் தொடர்கள் மற்றும் பிரத்தியேகமான podcasts போன்றவற்றை ஒரே பகுதியில் வரையறைகளின்றி கண்டு களிக்கும் வாய்ப்பை வழங்கும். மேலும், Roopa Hala கட்டமைப்பினூடாக, இலங்கையின் திரைப்பட தயாரிப்பாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் இயக்குனர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்தவும், தமது இலக்குக்குரிய பார்வையாளர்களை சென்றடையவும் பிரத்தியேகமான வாய்ப்பு வழங்கப்படும்.

400 க்கும் அதிகமான தலைப்புகளில் 1500 மணித்தியாலங்களுக்கு மேலான இரசனையூட்டும் பொருளடக்கங்களுடன், சிங்களம் பேசும் பார்வையாளர்கள் மத்தியில் பரந்தளவு தெரிவுகளை நிவர்த்தி செய்யும் வகையில் Roopa Hala அமைந்துள்ளது. மொபிடெல் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு ரூ. 999+ வரிகள் அடங்கலாக 2025 ஜுன் மாதம் 22ஆம் திகதி வரை வழங்கப்படும். இதனூடாக, சிறந்த பெறுமதி மற்றும் களிப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக பல பிரத்தியேகமான உள்ளம்சங்களை Roopa Hala கொண்டுள்ளது. பார்வையாளர்களுக்கு ஸ்மார்ட்ஃபோன்கள், டப்லெட்கள் மற்றும் ஸ்மார்ட் தொலைக்காட்சிகள் என ஒன்றுக்கு மேற்பட்ட சாதனங்களில் ஸ்ட்ரீம் செய்யும் வசதியை வழங்குவதுடன், தமது விரல் நுனிகளில் களிப்பூட்டும் அம்சங்களை அனுபவிக்கும் வசதி கிடைப்பதை உறுதி செய்கிறது. பெரிய திரையில் சினிமாவை கண்டுகளிக்க ஆர்வமுள்ளவர்களுக்காக Roopa Hala இனால் தற்போது ஸ்மார்ட் தொலைக்காட்சி அப்ளிகேஷன் வழங்கப்படுகிறது. இது பாவனையாளர்களுக்கு சிறந்த திரை தர அனுபவத்தை தமது இல்லங்களிலிருந்தே அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகிறது.

இந்த கட்டமைப்பு அனைத்து உள்ளடக்கத்தையும் பாதுகாக்க டிஜிட்டல் உரிமைகள் மேலாண்மை (DRM) பாதுகாப்பைப் பயன்படுத்துகிறது. உள்ளடக்கப் பாதுகாப்பில் அக்கறை கொண்ட பாவனையாளர்களுக்கு மன அமைதியை வழங்கும் Roopa Hala, உள்ளடக்க உரிம ஒப்பந்தங்கள் மற்றும் பிராந்திய சட்டங்களுக்கு இணங்க geo-blocking ஐயும் பயன்படுத்துகிறது. கூடுதலாக, Roopa Hala விளம்பரமில்லா அனுபவத்தை வழங்குகிறது, இது பாவனையளார்களுக்கு தடையின்றி, பிரீமியம்-தரமான, கவனச்சிதறல்கள் இல்லாமல் அனுபவிப்பதை உறுதி செய்கிறது.

சிங்கள களிப்பூட்டும் அம்சங்களை மாற்றியமைக்க Roopa Hala எதிர்பார்க்கிறது. 65க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கையின் களிப்பூட்டும் அம்சங்களை வழங்கும் Roopa Hala, சர்வதேச மட்டத்திலுள்ள சிங்கள சமூகத்தினரை தமக்கு பிடித்த அம்சங்களுடன் இணைக்கிறது. இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள இலங்கையர்களுக்கு சிறந்த டிஜிட்டல் களிப்பூட்டும் தெரிவுகளை இந்த சர்வதேச அறிமுகம் உறுதி செய்கிறது.




City of Dreams Sri Lanka

# ஒரு தேசிய மாற்றத்தின் மைல்கல்

ஜெயகாந்த் ஜானு
















இலங்கையில் இதுவரை கட்டப்பட்ட மிகப்பெரிய முதலீட்டுத் திட்டமாகவும் தெற்காசியாவின் முதல் ஒருங்கிணைந்த ஹோட்டல் வளாகமாகவும் திகழும் 'City of Dreams Sri Lanka (CODSL) அதன் பெருமைக்குரிய பயணத்தைத் தொடங்கியது. அதன் அங்குரார்ப்பண நிகழ்வு பிரமாண்டமான விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆரம்ப விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பொலிவூட் சினிமா நடிகர் ஹிருத்திக் ரோஷன் வந்துள்ளதுடன் மேலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட பல அரசியல் முக்கியஸ்தர்கள், தொழிலதிபர்கள், கிரிக்கெட் வீரர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளியூர் நடிகர்கள், பாடகர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

ஆடம்பரமும் உள்ளூர் வடிவமைப்பும் ஒன்றிணைந்த ஒரு தனித்துவமான இடமாக இந்த Sity of Dreams Sri Lanka இலங்கையின் லட்சியங்கள், படைப்பாற்றல் மற்றும் உலகளாவிய தொலைநோக்கு பார்வையின் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இலங்கை மற்றும் சர்வதேச கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய 'City of Dreams Sri Lanka வின் அங்குரார்ப்பண விழா, கண்கவர் நிகழ்ச்சிகளும் உணவு விருந்து நிகழ்வுகளும் நிறைந்து விளங்கியது. இந்த நிகழ்வின் போதே, புத்தாக்கமான அணுகுமுறைகள் மூலம் ஒரு பிரமாண்டமான அனுபவத்தை உருவாக்க முனைந்த 'City of Dreams Sri Lanka வாடிக்கையாளர்களுக்கு மறக்கமுடியாத சுவாரஸ்யமான அனுபவங்களை வழங்கத் தயாராக இருப்பதை வெளிப்படுத்தியது.

John Keels Holdings மற்றும் Melco Resorts and Entertainment MRE ஆகியவற்றின் வலுவான கூட்டு முயற்சியின் ஒரு மிகுந்த வெற்றிகரமான திட்டமாக City of Dreams Sri Lanka அமைந்துள்ளது. இது புத்தாக்கம், தேசிய பெருமை மற்றும் உலகளாவிய அங்கீகாரம் கொண்ட ஒரு இலங்கையை உருவாக்குவதற்கான மையமாகவும் அமைந்துள்ளது.

"இது இலங்கைக்கு ஒரு திருப்புமுனையான தருணம்," என John Keells குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா தெரிவித்தார். "City of Dreams, நமது நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய தனியார் முதலீடாகும் இது ஒரு இலட்சியமிக்க தேசிய தொலைநோக்குப் பார்வையை உயிர்ப்பித்துள்ளது. இது ஒரு கட்டுமானத்தை விட மேலானது, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டவும், நமது உலகளாவிய மதிப்பை உயர்த்தவும், எதிர்வரும் தலைமுறைகளை ஊக்குவிக்கும் ஒரு நவீன, முன்னோக்குச் சிந்தனையுள்ள இலங்கையை வடிவமைக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு உலகத் தரம் வாய்ந்த இடமாகும்" எனவும் குறிப்பிட்டார்.

Micro Resort and Entertainment இன் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி Lawrence Ho இந்த சிறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், " இந்த தொலைநோக்குத் திட்டத்தில் ஜோன் கீல்ஸ் குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். City of Dreams Sri Lanka, Malcoவின் நிபுணத்துவத்துடன் இலங்கையின் அன்பு மற்றும் கலாச்சாரத்தை இணைத்து ஒரு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பைப் பிரதிபலிக்கிறது. NOWA மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கெசினோ வசதிகளை இயக்குவதில் எங்களது பங்கின் மூலம் தெற்காசியாவில் ஆடம்பரம் மற்றும் விருந்தோம்பலுக்கான புதிய தரநிலைகளை அமைக்கும் அதே வேளையில், இலங்கையின் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டாடும் ஒரு இடத்திற்குப் பங்களிப்பு செய்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்" என தெரிவித்தார்.

கடந்த ஒரு வருட காலமாக, 500க்கும் மேற்பட்ட உள்ளூர் கலைஞர்கள், ஹோட்டல் நிபுணர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள், சர்வதேச வடிவமைப்பு நிபுணர்கள் மற்றும் Melcoவின் உலகளாவிய நிபுணர்களுடன் இணைந்து, 'City of Dreams Sri Lanka' திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற பெரும் பங்களிப்பை அளித்துள்ளனர். குறிப்பாக, சுவர்களில் கைவண்ணம் வரைந்த ஓவியங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப்படைப்புகள் மூலம் இலங்கையின் திறமைகளை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்பின் புதிய அத்தியாயம்

City of dreams Sri lanka என்பது ஒரு ஆடம்பர ஹோட்டல் திட்டத்தையும் தாண்டி இலங்கையின் திறங்கள் மற்றும் புத்தாக்கமான சின்னங்களைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாகும். கொழும்பு நகரத்தின் மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக இது எளிதாக மாறியுள்ளது. தனித்துவமான விழாக்களுக்கான ஆடம்பர வசதிகளுடன் கூடிய city of Dreams உயர் வருமானம் பெறும் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பதோடு, உள்நாட்டு வணிகங்களின் வளர்ச்சிக்கும் தனது பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தின் முதல் ஒருங்கிணைந்த ஹோட்டல் வளாகமாக, இந்தத் திட்டம் அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெறும் வசதியை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இது அவர்களுக்கு அதிகப்படியான வசதியையும் எளிமையாக்குகிறது.

687 அறைகளைக் கொண்ட Cinnamon life மற்றும் Nuwa ஹோட்டலில் 113 அதி சொகுசு அறைகளைக் கொண்டுள்ளது. City of Dreams Sri Lanka சர்வதேச தரத்திற்கு ஈடான சேவைகளை வழங்குகிறது Melco நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் நவீன கெசினோ மற்றும் பொழுதுபோக்கு வலயம் சர்வதேச தரநிலைகள் மற்றும் நிர்வாக முறைகளுடன் இயங்கி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒப்பற்ற அனுபவத்தை வழங்க தயாராக உள்ளது.

City of Dreams Sri Lanka இலங்கையின் பிரபலமான சமையல் கலைஞர்களின் பங்களிப்புடன், பாரம்பரிய இலங்கை உணவு மரபுகளுடன் நவீன சுவை அனுபவங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இதற்காக 17 தனித்துவமான உணவகங்கள் மற்றும் Bar வசதிகளைக் கொண்டு, புத்தாக்கமான மற்றும் உயர்தர உணவு-பான வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

City of Dreams Sri Lanka அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் international Branded கடைகளைக் கொண்ட ஒரு ஷொப்பிங் காம்ப்ளக்ஸ் மூலம் சிறந்த தயாரிப்புகளை வாங்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மேலும், இந்த வளாகம் விசேட நிகழ்வுகள், கூட்டங்கள். கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்துவதற்கான அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது City of Dreamsஇன் குடியிருப்பு மற்றும் அலுவலக வளாகம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு ஒரு சிறந்த வீடு அல்லது அலுவலகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இது இதன் மற்றொரு தனித்துவமான அம்சமாகும்.



### மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் நோக்கி

# நகருமா பழங்குடி சமூகம்?







உஷாந்தினி கோபிநாத்,
கல்விமானி ((B.Ed),
முதுகல்விமானி (M.Ed),
கதிரவெளி, மட்டக்களப்பு.

ஒவ்வொரு ஆண்டினதும் ஆவணி மாதம் ஒன்பதாம் திகதி உலகப்பழங்குடிகள் தினமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

தமிழ் பேசும் சமூகக் குழுமத்தினராக மட்டக்களப்பு மாவட்டத்தின் நாசிவன்தீவு, வாகனேரி, முறுத்தானை, மாங்கேணி, காயான்கேணி, பனிச்சங்கேணி, மதுரங்குளம், கிரிமிச்சை, ஊரியன்கட்டு, கதிரவெளி, கட்டுமுறிவு, புணாணைக்கிழக்கு, வாகரை, குஞ்சங்குளம் போன்ற பிரதேசங்களில் ஆதிக்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இதனடிப்படையில், இந்தக் கிராமங்களிலுள்ள பழங்குடி மக்களின் வாழ்விடங்களில் உலகப் பழங்குடிகள் தினத்தை முன்னிட்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட அமைப்புக்கள் நிகழ்வுகளை நடத்துகின்றன.

பெரும்பாலும் இந்த நிகழ்வுகள், ஆதிவாசிகளின் பாரம்பரிய பண்பாட்டுக் கலாசாரம் அவர்களுடைய ஜீவனோபாயத் தொழில்களை அடையாளப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன.

பழங்குடி மக்களுக்கே உரிய உடை, பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கம் போன்றவற்றை உள்ளடக்கிய வகையில் இத்தினம் சிறப்பிக்கப்டுகின்றது. இது வரவேற்கத்தக்கது.

இதனை நோக்குகின்றபோது, பழங்குடி மக்களுக்கே உரித்தான கலாசாரம் பண்பாடு தொழில்கள் அவர்களது இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைமைகள் தொடர்ந்தும் சிதைவுறாமல் தக்கவைத்துக் கொள்வதற்கு இந்த அனுஷ்டிப்புக்கள் உதவியாக இருக்கின்றன.

ஆனால், இந்த அனுஷ்டிப்புக்களை மறுபக்கம் நோக்கும்போது, பழங்குடியினரை அப்படியே காட்சிப் பொருளாக வைத்து ரசித்து மகிழ்வதற்காகவா இத்தனை ஏற்பாடுகளும் என்ற கேள்வி மாற்றுச் சிந்தனையாளர்களிடம் எழுகின்றன.

மாறி வருகின்ற நவீன உலகில் ஏனைய சமூகத்தில் வாழ்பவர்கள் பல வகையான முன்னேற்றகரமான விடயங்களில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், பழங்குடி மக்கள் காலில் செருப்பும் அணியாமல் காட்டில் வேட்டையாடச் செல்லுதல், தேன் சேகரித்தல், மீன்பிடித்தல், கூலி வேலை செய்தல் போன்ற தங்களது பாரம்பரியத்திினின்றும் விலகாத அடிநிலைத் தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

இதனால், அவர்கள் இன்றளவும் பொருளாதார நிலையில் மிகவும் பின்னடைவான நிலையில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது, பழங்குடி மக்களின் சமூக, கல்வி, சுகாதார, பொருளாதார, அரசியல் நிலைமைகள் இன்றளவும் எதுவித முன்னேற்றங்களும் இல்லாது அடிநிலையிலேயே காணப்படுகின்றது.

நவீன சவால்களுக்கு முகங்கொடுக்கவோ அதனுடன் போட்டிபோடவோ முடியாதவர்களாக அந்த சமூகம் உள்ளது.

பழங்குடி சமூகத்தினர் ஏனைய சமூகத்தவர்களுடன் இணைந்து வாழ தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றனரா? கல்வி, பொருளாதார நிலையில்; முன்னேறுவதற்கான முயற்சிகளை நோக்கி அவர்கள் நகர்கிறார்களா? என்ற கேள்விகளுக்கு இல்லை என்ற பதில்தான் பொருத்தமாக உள்ளது.

இவ்வாறான பல கேள்விகள் சமூக வளர்ச்சியில் அக்கறை கொள்ளும் அனைவரினதும் மனங்களில் எழ வேண்டும்.

இந்த விடயங்களைப் பற்றி பழங்குடி சமூகத்தினர் மாத்திரமல்ல, பழங்டியினரல்லாத மற்றைய சமூகங்களில் உள்ள அனைவரும்கூட கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன், பழங்குடி மக்களும் தமது மாற்றம் தொடர்பாக கவனத்திற்கொள்ள வேண்டும்.

பழங்குடி சமூகத்தினரை தனித்து விடாமல் இணைத்து செயற்படுகின்றபோதே அவர்களிடையேயும் ஒட்டுமொத்த மனிதர்களதும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களையும் மாற்றத்தினையும் அபிவிருத்தியையும் எதிர்பார்க்க முடியும்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட அமைப்புக்கள் தவறி விட்டனவா? அவ்வாறாயின் அதுபற்றி காலம் தாழ்த்தாது சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

அதேபோல், இந்த விடயத்தில் அரசும் முக்கிய பொறுப்பை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பழங்குடி சமூகங்கள் வாழும் கிராமங்களிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திகள், வளங்களின் மீது கவனம் செலுத்துவதுடன், பழங்குடி சமூக மாணவர்களின் இடைவிலகல் தொடர்பில் தொடர் கண்காணிப்பினை மேற்கொள்வதும் அவசியமாகும்.

பழங்குடி சமூக மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்டு இடைவிலகுவதனைத் தடுக்கும் வகையிலான பொருத்தமான பொறிமுறைகளை கல்வித்துறை ஏற்படுத்த வேண்டும்

அந்த சமூகத்தில் நிலவும் இளவயதுத் திருமணம் தொடர்பாக கரிசனை கொள்ள வேண்டும்.

பழங்குடி மக்களுக்கு சொந்தமானது என்று கூறக்கூடிய அளவுக்கு அவர்களிடம் விவசாய நிலங்கள் இல்லை. ஏனைய சமூகத்தவர்களின் விவசாய நிலங்களிலேயே அவர்கள் விவசாயக் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்துகிறார்கள்.

பழங்குடி மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தின் 26வது பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. “பழங்குடி மக்களுக்கு அவர்கள் பாரம்பரியமாக வசித்து வந்த நிலங்கள், பயன்படுத்திய நிலங்கள் அல்லது கையகப்படுத்திய நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உண்டு”

குஞ்சங்குளம் கிராமத்தில் வசிக்கும் வேடுவ ஆதிவாசிகள் சமூகத்தினர் வசித்துவந்த காணிகளை வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளதாகவும் அங்கு சுமார் 70 ஆதிவாசி வேடுவ சமூகக் குடும்பங்கள் வாழுகின்ற போதிலும், 40 குடும்பங்களுக்கே காணிகளும் வீடுகளும் உள்ளன என்றும் அச்சமூகத் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தெரிவிக்கிறார்.

பழங்குடி மக்களின் நலனில் கவனம் செலுத்தி வரும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனம் அந்த சமூகத்தின் பின்னடைவான நிலைமைகளில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளை முனைப்புடன் செயற்படுத்தி வருவதாக விழுது நிறுவன நிகழ்ச்சித் திட்ட அதிகாரி இந்துமதி ஹரிஹரதாமோதரன் தெரிவித்தார்.

ஆதிவாசி சமூகங்களிடையே காணப்படுகின்ற பிரச்சினைகளை மையப்படுத்தி அவற்றைத் தீர்க்கின்ற ஒருங்கிணைந்த சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளில் நாம் மிகக் கூடிய கவனம் செலுத்துகின்றோம் மேலும், ஓரங்கட்டப்பட்ட சமூகத்தினருக்கான மனித உரிமைகளில் நாம் அதிக அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றோம். குறிப்பாக பழங்குடி சமூகத்தில் பெண்கள் பாரம்பரிய வழக்காறுகளாலும் பிற்போக்குத் தனமான செயற்பாடுகளாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அதிலிருந்து அவர்களை விடுவிக்கும் விழிப்புணர்வுகளை ஊட்டி வருகின்றோம்” என்றாரவர்.

சமூக ஆய்வாளரும் செயற்பாட்டாளருமான ஏ.எச்.ஏ.ஹுஸைன் ஆதிவாசிகள் சமூகத்தினர் பற்றிய கரிசனையை இவ்வாறு வெளியிடுகிறார். பழங்குடி, பழங்குடி அல்லாதார் என்னும், பிரிவினையே அடிப்படையிலேயே தவறானது. தாழ்ந்த சமூகத்தினர் உயர் ஜாதியினர் என்ற பேதத்திலிருந்து மானுடவியல் விடுதலை பெற்றாகவேண்டும். மானுடவியலின் தவறுகள் சமூகத்தின் தவறுகளாகவும் இருப்பதால் இது நமக்கும் பொருந்தும்.

ஆதிவாசி வேடுவ சமூகத்தினர் தங்களை நலன்புரித் திட்டங்களுக்கு எப்பொழுதும் உரித்துடையவர்கள் என்பதையும் தாங்களே அந்தஸ்துக் குறைவானர்கள் என்றும் தாழ்வு மனப்பாங்கை வளர்த்துக் கொண்டுள்ளார்கள்.

மேலும் அந்த சமூகத்திலுள்ள, முன்வந்து பேசக் கூடியவர்கள் அல்லது தலைவர்கள் என்று கருதுவோர் அந்த சமூகத்தினரை எப்பொழுதும் அப்படியே வைத்திருக்க முனைவதும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. அதனால், அந்த சமூகத்தின் முன்னேற்றம் தடைப்படுகிறது. ஆதிவாசி வேடுவ சமூகத்திலுள்ள இளையோர் மாற்றத்தை நோக்கி நகர்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கு கல்வியே ஒரு நகர்த்தும் உபகரணமாக இருக்கும். எனவே முழுமையான கல்வி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்”என்றார்.

ஆகவே, தற்போதைய நிலையில் பழங்குடி சமூகத்தினர் அவர்களது பாரம்பரியமான கலாசார பண்பாட்டு வாழ்வியல் முறைமைகளுடன் முழுமையான வாழ்வினை வாழ்பவர்களாகவும் இல்லாமல் ஏனைய சமூகத்தினரைப் போன்று அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் செல்பவர்களாகவும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலைமையில் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாதவர்களாக நிராதரவாகி நிற்கிறார்கள்.

# மதன் பாப் என்ற மதன் பாபு

பிரபல நகைச்சுவை மற்றும் குணச்சித்திர நடிகர் மதன் பாப் என்ற மதன் பாபு சனிக்கிழமை(02) அன்று காலாமானர். உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட மதன் பாபுவின் உயிர் பிரிந்தது. தமிழ் சினிமாவில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து புகழ்பெற்றவர் நடிகர் மதன் பாப். இவரை மதன் பாபு என்று அழைப்பார்கள்.



100க்கும் அதிகமான திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார். மதன் பாபு, தமிழ் சினிமாவில் நீங்கள் கேட்டவை என்ற திரைப்படத்தின் மூலமாக நடிகராக அறிமுகமானார். குறிப்பாக நடிகர் விஜய்யின் ‘பூவே உனக்காக’, ‘ப்ரண்ட்ஸ்’, ‘கண்ணுக்குள் நிலவு’,’ யூத்’, நடிகர் அஜித் குமாரின் ‘வில்லன்’, கமல்ஹாசனின் ‘பம்மல் கே சம்பந்தம்’, ‘வசூல் ராஜா எம்பிபிஎஸ்’ உட்பட பல திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இவர் தனது வித்தியாசமான சிரிப்பால் மக்கள் மனதில் நிலைத்து நின்றார். சினிமா நடிகர் மட்டுமின்றி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து வந்தார். நிகழ்ச்சி தொகுப்பாளர், நிகழ்ச்சி நடுவர் உள்ளிட்ட பணிகளையும் செய்தார். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், ‘அசத்தப் போவது யாரு?’ என்ற கொமெடி நிகழ்ச்சியில் நடுவராகச் செயல்பட்டார்.

71 வயதான மதன் பாபு, சென்னை, அடையாறு உள்ள அவரது இல்லத்தில் வசித்து வந்த நிலையில், அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு சனிக்கிழமை(02) மாலை 5 மணிக்கு உயிரிழந்துள்ளார்.

இருப்பினும், அவர் எந்த மாதிரியான உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்பது பற்றிய தகவல் வெளியாகவில்லை. ஆனால், அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும் ஒரு தகவல் சொல்லப்படுகிறது.

**“அவர் எந்த மாதிரியான உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்பது பற்றிய தகவல் வெளியாகவில்லை. ஆனால், அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும் ஒரு தகவல் சொல்லப்படுகிறது**

மதன் பாபு தனது திரைப்பயணத்தை இசைக் கலைஞராகத் தொடங்கினார். சிறுவயதிலேயே கிட்டார் வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

அத்துடன், நாடகங்களுக்குப் பின்னணி இசை, சினிமா என்று பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர் தான் இந்த மதன் பாபு. மறைந்த பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிர மணியம் உட்பட பல பிரபலங்களை வைத்து வெளிநாடுகளில் மதன்பாபு கச்சேரி நடத்தினார்.

‘இசைப்புயல்’ ஏஆர்.ரஹ்மான், மதன் பாப் குழுவில் கீபோர்ட் வாசித்துள்ளார். மதன்பாபுவை தனது குரு என்று ஏ.ஆர்.ரஹ்மான் கூறியிருக்கிறார். மதன்பாபுவுக்கு உடற்பயிற்சி மீது அதீத பிரியம் உண்டு. சிறுவயது முதலே உடற்பயிற்சி செய்வதை வழக்கமாக வைத்துள்ளார். அதேபோல் பாக்சிங்கிலும் அசத்தினார். ‘சார்பட்டா பரம்பரை’ பாக்ஸர்களில் ஒருவராகவும் வலம் வந்தார்.

மதன் பாபுவின் தந்தை பெயர் சுப்பிரமணியம். சுதந்திரப் போராட்டத்து பங்கெடுத்தவர். ‘மதுரை மித்ரன்’ என்ற பெயரில் பத்திரை நடத்தினார். முன்னாள் முத்வர் காமராஜரின் நண்பர் ஆவார். மன்பாபுவின் அம்மா பெயர் பொன்னம்மாள்.

இவர் கர்நாடக சங்கீதம் கற்றவர். பாட்டு வகுப்பு எடுத்து வந்தார்.

மதன் பாபுவின் மனைவி பெயர் சுசிலா. இவர் பாடகி.

இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இந்த தம்பதிக்கு ஜனனி என்ற மகளும், அர்ஷித் என்ற மகனும் உள்ளனர்.

அவரது மறைவு திரைத்துறையினர் மற்றும் அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# மயூரபதி அம்மன் ஆலய பஞ்ச இரத பவனி

கொழும்பு, வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் 38ஆவது ஆண்டு ஆடிப்பூர மகோற்சவத்தில் பஞ்சரத பவனி சனிக்கிழமை (02) அன்று நடைபெற்றது.



ஜெருசலேம்



## பாலஸ்தீன உதவி மைய கூட்ட நெரிசலில்

# 48 பலி

காசாவில் உள்ள ஜிகிம் கிராசிங்கில் உள்ள உதவி மையத்தில் நிவாரண பொருட்களுக்காக காத்திருந்த மக்களின் கூட்ட நெரிசலில் சிக்கி, பாலஸ்தீனர்கள் 48 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 12க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளிளிட்டுள்ளன.

காசா சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, ஜூன் மாதத்திலிருந்து குழந்தைகள் 89 பேரும், வயதானவர்கள் 65 பேரும் ஊட்டச்சத்து குறைபாட்டால் இறந்துள்ளனர். சர்வதேச நாடுகள், காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை அனுமதிக்க இஸேரல் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் படையினர் இடையே நீண்ட நாட்களாக போர் நடந்து வருகிறது. காசாவில் இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இஸ்ரேல் இராணுவ தாக்குதலில், 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா உதவி மையங்களில், நிவாரண பொருட்களுக்காக காத்திருந்த 1,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகவும், இஸ்ரேல் பசி, பட்டினியை ஆயுதமாக பயன்படுத்துவதாகவும் ஐ.நா. குற்றம்சாட்டியுள்ளது.

வொஷிங்டன்



## அமெரிக்காவில்

# மரண தண்டனை அதிகரிப்பு

அமெரிக்காவில் 2025ஆம் ஆண்டின் ஏழு மாதங்களில் சுமார் 27 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் இருவருக்கு இந்த மாத இறுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்படஉள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றன.

குறிப்பாக, புளோரிடா மாகாணம் முதலிடத்தில் உள்ளது. இங்கு மட்டும் இந்தாண்டில் ஒன்பது பேருக்கான மரண தண்டனையை மாகாண ஆளுநர் டீசான்டிஸ் உறுதி செய்துள்ளார்.


அமெரிக்காவில் மரண தண்டனை விஷ ஊசி, மின்சார நாற்காலி, விஷவாயு அறை, துப்பாக்கியால் சுடுதல், தூக்கு ஆகிய முறைகளில் நிறை வேற்றப்படுகிறது.

அமெரிக்காவில் கூடுதலான மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ஆண்டு என்றால், 2015ஆம் ஆண்டாகும். அந்த ஆண்டில் 28 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஜகார்த்தா

# வெடித்து சிதறிய 'லகி லகி'

## மக்களுக்கு எச்சரிக்கை; விமானங்களுக்கு தடை



இந்தோனேசியா நாட்டிலுள்ள லெவொடோபி லகி லகி எரிமலை சுமார் 18 கிலோ மீட்டர் உயரத்திற்கு வெடித்ததால் அப்பகுதி முழுவதும் படலம் மற்றும் புகைப் பரவியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தோனேசியாவின் புவியியல் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில்,

எரிமலை வெடிப்பின்போது அதன் சரிவுகளில் எரிமலை வாயு மேகங்களை வெளியேற்றியதைப் பதிவு செய்ததாகக் கூறியது.

உயிரிழப்புகள் குறித்து உடனடி தகவல்கள் எதுவும் இல்லை.

ஜூன் 18 அன்று வெடித்த எரிமலை அப்பகுதியில் சுமார் 32,800 அடி உயரத்துக்கு கரும்புகைகள் சூழ்ந்தது. அதிலிருந்து நாட்டின் எரிமலை கண்காணிப்பு நிறுவனம் எச்சரிக்கை நிலையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

மேலும், எரிமலை வெடிப்புகள் அடிக்கடி நிகழ்வதால் அங்கு உயர்நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டு சுமார் 8 கி.மீ. சுற்றளவில் வசிக்கும் மக்கள் அனைவரும் தங்களது வீடுகளை விட்டு வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பரில் மவுண்ட் லெவோடோபி லகி லகி எரிமலை வெடித்ததில் ஒன்பது பேர் உயிரிழந்தனர், மேலும், 12 பேர் காயமடைந்தனர்.

மார்ச் மாதத்திலும் எரிமலை வெடித்தது. 1,584 மீட்டர் உயரமுள்ள இந்த மலை, புளோரஸ் தைமூர் மாவட்டத்தில் உள்ள லெவோடோபி பெரெம்புவான் மலையுடன் கூடிய இரட்டை எரிமலையாகும்.

முன்னதாக, நூற்றுக்கணக்கான தீவுகளினால் உருவான இந்தோனேசியா நாட்டில் சுமால் 120 எரிமலைகள் உள்ளன. மேலும் ரிங் ஆஃப் ஃபையர் என்றழைக்கப்படும் டெக்டோனிக் தகடுகளின் மிகப் பெரியளவிலான பிளவுக்கோட்டின் மீது இந்நாடு அமைந்துள்ளதால், இயற்கை சீற்றங்களுக்கான அபாயம் என்றுமே உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இமாச்சல்

# சக பயணியை அறைந்தவருக்கு விமானத்தில் வாழ்நாள் பயணத் தடை




மும்பையில் இருந்து கொல்கத்தா சென்று கொண்டிருந்த இண்டிகோ 6E138 என்ற விமானத்தில் பயணம் செய்த சக பயணியை கன்னத்தில் அறைந்தவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இண்டிகோ விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

அசாமின் கச்சார் மாவட்டத்தைச் சேர்ந்த அகமது என்பவர் அண்மையில் இண்டிகோ விமானத்தில் மும்பையில் இருந்து கொல்கத்தா சென்று கொண்டிருந்தார்.

உடல்நிலை சரியில்லாத நிலையில் சென்ற அகமதுவை, இரண்டு விமான பணிப்பெண்கள் அவரது இருக்கைக்கு அழைத்துச் சென்றபோது, திடீரென மற்றொரு பயணி அகமதுவை கன்னத்தில் அறைந்துள்ளார். உடனே அகமதுவுக்கு பணிப்பெண்கள் முதலுதவி அளித்துள்ளனர்.

பின்னர் விமானம் கொல்கத்தா விமான நிலையத்தை அடைந்ததும் தாக்குதல் நடத்திய நபர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், விமானத்தில் சக பயணியை தாக்கியவருக்கு வாழ்நாள் பயணத் தடை விதிக்கப்படுவதாக இண்டிகோ விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.




## இரண்டாவது போட்டியில்

# பாகிஸ்தானை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்

பாகிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஐக்கிய அமெரிக்காவில் ஞாயிற்றுக்கிழமை(03) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 133/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹஸன் நவாஸ் 40 (23), சல்மான் அக்ஹா 38 (33), பக்கர் ஸமன் 20 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 4/19 [4], குடகேஷ் மோட்டி 2/39 [4], றொஸ்டன் சேஸ் 1/11 [2], அகீல் ஹொஸைன் 1/16 [4], ஷாமர் ஜோசப் 1/22 [4])

மே. தீவுகள்: 135/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: குடகேஷ் மோட்டி 28 (20), ஷே ஹோப் 21 (30), ஜேஸன் ஹோல்டர் ஆ.இ 16 (10), றொஸ்டன் சேஸ் 16 (19), றொமாரியோ ஷெப்பர்ட் 15 (11), ஜுவெல் அன்ட்றூ 12 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் நவாஸ் 3/14 [4], சைம் அயூப் 2/20 [4], சுஃபியான் முக்கீம் 1/19 [4], ஷகீன் ஷா அஃப்ரிடி 1/31 [4])

போட்டியின் நாயகன்: ஜேஸன் ஹோல்டர்.




# டுபாய், அபுதாபியில் ஆசியக் கிண்ணம்

ஆசியக் கிண்ணத் தொடரானது ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய், அபு தாபியில் செப்டெம்பரில் நடைபெறவுள்ளதாக ஆசிய கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகுமென கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. செப்டெம்பர் 15ஆம் திகதி மாத்திரம் ஐக்கிய அரபு அமீரகம், ஓமானுக்கிடையிலான போட்டி மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளதுடன், அன்று இரவு 7.30 மணிக்கு இலங்கை, ஹொங் கொங்குக்கிடையிலான போட்டி நடைபெறவுள்ளது.

## கனேடிய பகிரங்கத் தொடர்:

# வெளியேற்றப்பட்ட கௌ:.ப், ருனே

கனேடிய பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான கொக்கோ கௌஃப், ஒன்பதாம் நிலை வீரரான ஹொல்கர் ருனே ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இறுதி 16 பேருக்கான சுற்றுப் போட்டியில் கனடாவின் விக்டோரியா எம்போக்கோவை எதிர்கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் கௌஃப், 1-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் அலெக்ஸெய் பொப்பிரயனை எதிர்கொண்ட டென்மார்க்கின் ருனே, 6-4, 2-6, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.





## இங்கிலாந்துக்கு எதிரான

# 5ஆவது டெஸ்டில் முன்னிலையில் இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்டின் மூன்றாம் நாள் முடிவில் முன்னிலையில் இந்தியா காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கின்ற நிலையில், ஓவலில் வியாழக்கிழமை (31) ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, குஸ் அட்கின்ஸன் (5), கிறிஸ் வோக்ஸ், ஜொஷ் டொங்கிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களையே தமது முதலாவது இனிங்ஸில் பெற்றது. கருண் நாயர் 57, சாய் சுதர்ஷன் 38, வொஷிங்டன் சுந்தர் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஸக் குறோலியின் 64, ஹறி ப்றூக்கின் 53, பென் டக்கெட்டின் 43, ஜோ றூட்டின் 29, ஒலி போப்பின் 22 ஓட்டங்களுடன், ஆகாஷ் டீப், பிரசீத் கிருஷ்ணா(4), மொஹமட் சிராஜ்ஜிடம்(4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, யஷஸ்வி ஜைஸ்வாலின் 118, டீப்பின் 66, இரவீந்திர ஜடேஜாவின் 53, சுந்தரின் 53, துருவ் ஜுரேலின் 34 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 396 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் டொங்க் 5, அட்கின்ஸன் 3, ஜேமி ஒவெர்ட்டன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அந்தவகையில், 374 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, மூன்றாம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் டக்கெட் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை மொஹமட் சிராஜ் கைப்பற்றியிருந்தார்.

# உலக சம்பியன்ஷிப்ஸ்: முதலிடம் பெற்ற லெடக்கி




சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக நீர்விளையாட்டு சம்பியன்ஷிப்களில், சனிக்கிழமை (02) அன்று நடைபெற்ற பெண்களுக்கான 800 மீற்றர் பிறீஸ்டைலில் ஐக்கிய அமெரிக்காவின் கேட்டி லெடக்கி வென்றார்.

போட்டித் தூரத்தை எட்டு நிமிடங்கள் 05 செக்கன்கள் 62 மில்லி செக்கன்களில் கடந்து லெடக்கி முதலிடம் பெற்ற நிலையில், மேலதிகமாக 36 மில்லி செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து அவுஸ்திரேலியாவின் லனி பலிஸ்டர் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, லெடக்கியை விட 1.67 செக்கன்கள் தாமதமாக போட்டித் தூரத்தைக் கடந்த கனடாவின் சமர் மக்கின்டொஷ் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 04, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.